# புன்னாலைக்கட்டுவன் சந்தியைநோக்கி ராணுவம் முன்னேறும் முயற்சி புலிகளால் தடுப்பு

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவன் சந்தியை நோக்கி நேற்று, முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் இடைமறித்துக் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றுக் காலை புன்னாலைக் கட்டுவன் சந்தியை நோக்கி டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் பெருமெடுப்பில் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் உக்கிர தாக்குதலை நடாத்தினர்.

தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை நடாத்தியவண்ணம் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலில் இராணுவத்தினருக்கு நேற்றும் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இப்பகுதியில் தொடர்ந்தும்

(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 6-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 2 இதழ் 257

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19 - 10 - 1995

## 19 போராளிகள் நேற்று வீரச்சாவு

[யாழ்ப்பாணம்]

இராணுவத்துடன் நேற்று நடைபெற்ற கடும் சமரில் 19 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

நேற்று முன்தினமும் நேற்றும் இராணுவத்துடன் நடைபெற்ற மோதலில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிப் போராளிகளுக்கு யாழ் குடாநாடு முழுவதும் பொது மக்கள் தமது அஞ்சலியைத் தெரிவித்து வருகின்றனர்.

வீதிகள் எங்கும் வாழைகள் தோரணங்கள் கட்டப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்களிலும் வீடுகளிலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன வி...

# இணுவிலில் புக்காரா கொடூரம்

# பதுங்குகுழி மீது குண்டு வீச்சு

# 15 அப்பாவிகள் உடல்சிதறிப்பலி

## கருகியநிலையில் சடலங்கள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

**இணுவில் பகுதியில் நேற்றுக்காலை புக்காராவிமானம்ஒன்று மக்கள்குடியிருப்புகள் மீது மேற்கொண்ட மிகக் கொடூர குண்டு வீச்சுத் தாக்குதலில் பதுங்கு குழி ஒன்றில் தஞ்சமடைந்திருந்த இரு குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் உட்பட 15 பேர் ஸ்தலத்திலே உடல்சிதறிப் பலியானார்கள். உயிரிழந்தவர்களில் ஐவர் சிறுவர்களாவர்.**

இணுவில் கிழக்கு காலிங்கன் தியேட்டர் வீதியில் கலாஜோதி சனசமூக நிலையத்திற்கு அண்மையிலேயே நேற்று காலை 6-15 மணியளவில் இக் கொடூர குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் உயிரிழந்த

(5ம் பக்கம் பார்க்க)

## அகோர ஷெல் வீச்சால் ஒருவர் பலி 8 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர் குடியிருப்பு பகுதிகளை நோக்கி நேற்று மேற்கொண்ட கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி ஒருவர் கொல்லப்பட்டதோடு எண்மர் படுகாயமடைந்தனர்.

பலாலி இராணுவத்தினர் நேற்று இரண்டாவது நாளாக வலி வடக்கு, கிழக்கு பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## சுப்பசொனிக் தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் கிழக்கு பகுதியில் நேற்று காலை சுப்பசொனிக் விமானம் மேற்கொண்ட குண்டு வீச்சு தாக்குதலினால் குடும்பஸ்தரான இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சுப்பசொனிக் விமானம் உரும்பிராய் பகுதிக்கு திடீரென வந்து குண்டை வீசித் தாக்கிவிட்டு சென்றது.

இந்த குண்டு வீச்சுக்கு இலக்காகி மாட்டுக்கு தண்ணீர்

[6ம் பக்கம் பார்க்க]

## சேதம் குறித்து இராணுவம் தகவல் வெளியிட மறுப்பு

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் படையினர் மேற்கொள்ளும் 'ஒப்பரேஷன் சண் சைன' ராணுவ நடவடிக்கையில் தமக்கு ஏற்பட்ட சேதத்தை படையினர் மறைத்து இருட்டடிப்பு செய்து வருவதாக பி பி ஸி தெரிவித்தது.

பி. பி. ஸி. மேலும்தெரிவிக்கையில்: இந்த நடவடிக்கையில் இராணுவத்தினர் எதிர்பார்த்ததைவிட அதிகளவு இழப்பு படையினருக்கு ஏற்

(6ம் பக்கம் பார்க்க)

## வல்வையில் ஷெல் வீழ்ந்து இளம்பெண் காயம்

[வடமராட்சி]

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றும் வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலால்ஒரு பெண் படுகாயமடைந்தார். சில வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 10 30 மணியளவில் இச் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

(2ம் பக்கம் பார்க்க)

## ஆயிரக்கணக்கில் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்து நேற்றுக் காலை முதல் மாலை வரை ஆயிரக்கணக்கில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் ஷெல்களில் பாவும் மக்குடியிருப்பை நோக்கியே ஏவப்பட்டன. யுத்தம் நடைபெறாத பகுதிகளிலேயே இச் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

அரை நிமிடத்துக்கு ஒன்று

(5ம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் போக்குவரத்தில் பெரும் பாதிப்பு

[கொழும்பு]

திருமலைத் துறைமுகத்திலுள்ள மூன்று கடற்படைக் கப்பல்களை விடுதலைப்புலிகள் தகர்த்தழித்ததினால் யாழ் குடா மீது இராணுவம் மேற்கொண்டு வரும் இராணுவநடவடிக்கை பெருப்பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முப்படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் மேற்படி இராணுவ நடவடிக்

(2ம் பக்கம் பார்க்க)

## யாழ். இலங்கை வங்கிக்கு ரூ. 3 கோடியை எடுத்துவர ராணுவம் அனுமதிக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளுக்கு எடுத்து வரப்பட்ட மூன்று கோடி ரூபாவை யாழ்ப்பாணம் கொண்டுவர பாதுகாப்பு அமைச்சு அனுமதிக்காததினால் அப் பணம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:- யாழ்ப்பாணத்தில் இலங்கை வங்கிக் கிளைகளில் நிலவும் பெரும் பணத்

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆண்டு 3 4 5 6, 7, 8 9, 10, O/L, A/L பழைய வினாத்தாள்கள் (Tutes 50 வீதம் தள்ளுபடி விலையில் விற்பனையாகின்றன. BOND யாழ்ப்பாணம். (ஏ-5382)

### தவறிவிட்டது

யாழ் . ஸ் நிலையத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் இரு தேசிய அடையாள அட்டை, இரு திறப்பு ஆகியன அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நவீலட் பாடசாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். ஏ- 1710

## வெடிக்காத ஷெல்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று இணுவிலில் குடிமனைப் பகுதியில் வீழ்ந்த போதும் வெடிக்கவில்லை. இதனால் வீட்டிலிருந்த 12 பேரும் உயிர் தப்பியுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு ஏவப்பட்ட இச்ஷெல் வீட்டுச்சுவர் ஒன்றினுள் புகுந்த போதும் வெடிக்கவில்லை. -இ

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"அக்கினிக்கரங்கள்" நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 21 ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தியப் படையினரால் யாழ் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் எட்டாவது ஆண்டு நினைவு கூருமுகமாக இந்நூல் வெளியிடப்படுகிறது

கவிஞர் நாவண்ணனின் படைப்பான இந்த நூல் தமிழ்த்தாய் வெளியீட்டகத்தினரால் வெளியிடப்படுகிறது

162

### வல்வையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வல்வை வேம்படிப் பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் குடும்பப் பெண்ணான சாரதாதேவி கோபிநாத் (வயது 38) என்பவர் படுகாயமடைந்தார்

இவர் வல்வை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 11 25 மணியளவில் மீண்டும் ஏவப்பட்ட ஷெல்லினால் ரெடியகாட்டில் இலட்சுமணரதன் என்பவரின் வீடு சேதமடைந்தது. 11 30 மணியளவில் ஏவப்பட்ட ஒரு ஷெல் கடற்பகுதியில் வீழ்ந்து வெடித்தது. மற்றொரு ஷெல் வல்வை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் விழுந்து வெடித்தது. (51 சி)

### கடற்படையின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கையில் கடற்படையினரின் உதவிகள் இராணுவத்தினருக்கு தடைப்பட்டுள்ளதாகவும், இதனால் விமானப்படையினரின் உதவியுடனேயே இராணுவம் தனது தாக்குதல்களை தற்போது மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. வி-இ

### பாணின் விலை 7 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நாளை வெள்ளிக்கிழமை முதல் பாணின் விலை ஏழு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மாவின் விலையை அரசு அதிகரித்ததனாலேயே இந்த விலை அதிகரிப்பெனவும் இது ஒரு தற்காலிகமான விலையேற்றம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -இ

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1995 நவம்பர் 20ம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்:

1. சிரேஷ்டவிரிவுரையாளர் தரம் I /சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) - வர்த்தகம்
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) -தாவரவியல்/ விலங்கியல்/ பௌதிகவியல்/ இரசாயனவியல்/ கணனி விஞ்ஞானம் / கணிதமும் புள்ளிவிபரவியலும்,
3, தற்காலிகச் செயன்முறை காட்டுநர் - தாவரவியல்/ விலங்கியல்/ பௌதிகவியல்/ இரசாயனவியல்/ கணணி விஞ்ஞானம்.
4. தற்காலிக போதனாசிரியர் - கணிதமும் புள்ளிவிபரவியலும்/ கணனிப் பகுதி

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தால், துறைத் தலைவராலும் பீடத்தலைவராலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப்பெயரை அளிக்க முடியும் என்பதுடன், துணை வேந்தரால் ரூபா 6050 - 10x250 -8,5 0/- மாதமொன்றுக்கு என்ற சம்பள அளவுத்திட்டத்தில் அவரை வைக்க முடியும்,

1ம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) உடன் சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவியில், ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்களிடமிருந்தும், நவம்பர்/டிசம்பர் 1995 இல் இறுதித் தேர்விற்குத் தோற்றுபவர்களிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்;

### சம்பள அளவுத் திட்டம்:

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I;
ரூபா
12,725-8 X 325-15,325/-
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா
10,650-5 X 325-12,275/-
உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்,
ரூபா
5 270/- (நிலையானது) மாதமொன்றுக்கு.
தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா
5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு.
தற்காலிகச் செயன்முறை காட்டுநர்: ரூபா 4,420 (நிலையானது) மாதமொன்றுக்கு

இத்துடன்,

அ) நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1995-12-31 ஆம் திகதி வரை சம்பளத்தில் 25 சத வீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

ஆ) ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப் படியின் 10 சதவீதமும், ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் புத்தகப் படியாகச் செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் திகதியிட்ட 9/93ஆம் இலக்கப் பொதுநிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும், அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23 X 10 ச. மீ அளவுடைய ரூபா 2/- முத்திரை யொட்டப்பட்டகடிதஉறையையும் அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றில் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்;

குறிப்பு:

1: விண்ணப்பப் படிவங்களையும் இதரவிபரங்களையும் கொழும்பு - 13 ஆட்டுப்பட்டித்தெரு 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்;

2 ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1995-10-10

(சி-5401)

## ஆங்கில ஆசிரியர்களாக மேலும் 30 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

1994. 06. 11ம் திகதி நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு மேற்குறிப்பிட்டோருக்குக் கடிதங்கள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு 18 ம் திகதி கிடைத்துள்ளன.

எதிர்வரும் 21ம் திகதி வவுனியாக் கல்வித் திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். உரியவர்கள் இக்கடிதங்களை வலயம் -1 கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளும்படி கல்விப்பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

சி. எல். டபிள்யு: பற்றிக் [யாழ்ப்பாணம்], வண பிதா ஜேம்ஸ் சிங்கராயர் [யாழ்ப்பாணம்], எ. சுபாசினி [கோண்டாவில்], கே. சேரலாதன் [திருநெல்வேலி], கே மந்தாகினி [திருநெல்வேலி], வை. கார்த்தியாயினி [சுன்னாகம்] ஆர். திருஞானசுந்தரம் [வல்வெட்டித்துறை] ஜி எஸ். சிறிகரன் [கொடிகாமம்], எ. ஜூட் ததேயு [யாழ்ப்பாணம்], பி எ. ம பி செபஸ்தியாம் பிள்ளை (யாழ்ப்பாணம்), ஆர். சுமங்கலா (யாழ்ப்பாணம்), எஸ் வல்லபை (அளவெட்டி), எ. கலதேவன் (சாவகச்சேரி), ஆர். கவிராஜ் (யாழ்ப்பாணம்), ஆர். வாசுகி (அச்சுவேலி), என். எஸ். ராஜ் (மானிப்பாய்) கே. அகிலவல்லி (சுன்னாகம்), பி அருணவதி (காரைநகர்), எ. சுபாஸ்கரி (கோப்பாய்), என். இராஜலன் (கொக்குவில்), ஜி ஈஸ்வரகுமரன் [யாழ்ப்பாணம்], கே விக்னராசா [ஏரவெட்டி], கே ஜதீர்த்தனன் [சாவகச்சேரி], எஸ் கோகுலநாதன் [மானிப்பாய்], கே. முருகையா [மீசாலை], ரி. பரமேஸழகபிள்ளை [நீர்வேலி], ஜே, ஜி. ஜெயபாலன் (வட்டுக்கோட்டை], எ. எஸ் ஏ. இராசையா (கோப்பாய்], எச். ஆர். ஜே. டி. எமானுவல் [யாழ்ப்பாணம்], இ. நிரஞ்சலாதேவி (யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்

## வெதுப்பியின் (பாணின்) விலை ரூ. 7/-

20-10-95 வெள்ளிக்கிழமை தொடக்கம் அரசாங்கத்தினால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டதனால் வெதுப்பியின் விலை ரூ. 7/-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது இது தற்காலிகமான விலையேற்றம். ஆகவே வியாபாரிகளுக்கு கொடுக்கப்படும் வெதுப்பிக்கான விற்பனைக் கழிவு -/25 சதத்தில் எதுவித மாற்றமும் இல்லையென்பதை சகல வர்த்தகப் பெருமக்களுக்கும் அறியத் தருகின்றோம்.

பாணைத் தவிர்த்து மற்றைய உப உணவுப் பொருட்களை மிகமிகக் குறைந்த அளவில் உற்பத்தி செய்யும்படி அங்கத்தவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

விலை, நிறை, தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் இருந்தால் எமக்கு அறியத் தரவும்.

மாவட்டத் தலைவர்

யாழ்: மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்
183, ஆடியபாதம் வீதி'
திருநெல்வேலி. (ஏ-5404)

## பின்வரும் பொருட்கள் எமக்குத் தேவைப்படுகின்றன

இவற்றை விற்க விரும்புவோர் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்

- வெற்றுச் சாக்குகள், உரப்பைகள்
- பழைய இரும்புகள், இரும்புப் பொருட்கள்
- அலுவலக உபகரணங்கள்
- மின்சார உபகரணங்கள்
- ஜாம் போத்தல்கள், சோடாப் போத்தல்கள்
- பாவித்த மேசை, கதிரை மற்றும் தளபாடங்கள்

நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள தயாராக இருக்கின்றோம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

துரித சந்தைப்படுத்தல் சேவை

61, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ-5402)

**மணிவாக்கு**

மனிதனை உருவாக்குவதில் துன்பமும் இன்பமும் சரி சமமான இடத்தைப் பெறுகின்றன.

- சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## யுத்தச் செய்திகள் இருட்டடிப்பு

யாழ்ப்பாணத்தைச் சுலபமாக கைப்பற்றி விடலாம் என்ற எண்ணத்தில் வலிகாமம் கிழக்கிலிருந்து பல முனைகளூடாக பல்லாயிரக்கணக்கான படையினர் டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் வெளியேறிய போது விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலுக்கு உள்ளாயினர். படையினருக்கு பலத்த சேதம் விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்பட்டது. எழுபது படையினர் வரை பலியானதுடன் ஏழு அதிகாரிகள் உட்பட நூற்றி ஐம்பது படையினர் காயமுற்றும் உள்ளனர். இறந்தவர்களும் காயமடைந்தோரும் விமான மூலம் ஏற்றிச்செல்லப்பட்டு கொழும்பு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். கொழும்பு நகரில் அம்புலன்ஸ் அலறல் ஓயாது கேட்ட வண்ணமாயிருந்ததென கொழும்பிலுள்ள பி பி சி செய்தியாளர் கூறியுள்ளார். இதிலிருந்து விடுதலைப்புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலின் கடுமையை அறிந்து கொள்ளலாம்.

படையினரின் முன்னேற்ற முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்த பின்னரும் அவர்கள் தங்கள் ஆற்றாமையைக் காட்டுவதற்காக வலிகாமம் கிழக்கிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தியதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர வேண்டியதாயிற்று.

இதேசமயம் வலிகிழக்கில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்பினை மூடி மறைப்பதற்கும் இருட்டடிப்பதற்கும் பாதுகாப்பு வட்டாரங்கள் முனைப்பாயிருந்தன. படையினரின் உயிரிழப்பை மிகவாகக் குறைத்து பதின்மூன்று பேர் எனக் கூறியுள்ளனர். இதேபோல் கடற்புலிகள் திருகோணமலை துறைமுகத்திற்குள் புகுந்து சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான ஒரு தரையிறங்கு கப்பல், ஒரு அதிவேக துருப்புக்காவிக்கப்பல், ஒரு டோரா அதிவேகபீரங்கிப் படகு எல்லாமாக மூன்று கலங்களை முற்றாகக்கடலில் மூழ்கடித்த விடயத்தையும் அப்போது அதிகாரிகள் உட்பட பல கடற்படையினர் கொல்லப்பட்டதையும் பாதுகாப்புப் பகுதியினர் இருட்டடிக்கச் செய்யும் வகையில் ஒரு கப்பல் மூழ்கியதென்று பொய்யாகக்கூறியுள்ளனர்.

வடக்கிலும் கிழக்கிலும் படையினருக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு, அவர்களுக்கு உண்டாகிவரும் உயிர் இழப்புகள், இராணுவ தளபாட இழப்புக்கள், ஜனாதிபதி சந்திரிகாவின் வெளி நாடுகளுக்கான பயணங்கள் ரத்தாக்கக் கூடிய அளவு இருக்கிறது. ஐ. நா. வின் ஐம்பது ஆண்டு நிறைவுவிழாவில் சந்திரிகா கலந்து கொள்ளவிருந்தார். ஆனால் நாட்டு நிலைமை மிகவும் மோசம் அடைந்துள்ளதால் அவரது பிரயாணம் ரத்துச் செய்யப்படலாம் எனக்கருதப்படுகிறது.

செய்தித்தணிக்கையை பிரகடனப்படுத்தி தமது படையினருக்கு ஏற்படும் இழப்புக்களை வெளியுலகுக்கு இருட்டடிப்புச் செய்யவும் படையினரால் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்படுவதை வெளியில் தெரியாமல் மறைப்பதற்கும் சந்திரிகா முயல்கிறார். நேற்றுக்கூட இணுவில் பகுதியில் புக்காரா விமானம் நடத்திய தாக்குதலில் பதினேழுக்கு மேற்பட்ட, இடம் பெயர்ந்து அகதிகளாகத் தங்கியிருந்தவர்கள் பரிதாபகரமாக கொல்லப்பட்டுள்ளனர். இத்தகைய அப்பட்டமான கொலைகள் வெளியில் தெரிய வரப்படாதென்பதே அரசின் நோக்கமாகும். அப்படியிருந்தும் இவ் உண்மைகள் வெளியுலகுக்கு எட்டிவிடுகின்றன.

நாகர் கோவிலில் நடைபெற்ற விமானக்குண்டு வீச்சால் அப்பாவி மாணவர்கள் கொல்லப்பட்ட விடயம் பருத்தித்துறையில் மருத்துவ சேவையாற்றி வரும் எம். எஸ். எவ்வைச் சேர்ந்த பிரெஞ்சு டாக்டர்களால் யுனெஸ்கோ நிறுவனத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. அதை அடுத்து யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் நாகர் கோவில் கோரக் கொலைகளைக் கண்டித்து அறிக்கை ஒன்றை விட்டிருந்தார். அவர் விடுத்த அறிக்கை முற்றிலும் உண்மைத் தகவல்களின் அடிப்படையிலேயே விடப்பட்டது. ஆனால் சிறிலங்கா அரசுக்கு இது பிடிக்கவில்லை. சிறிலங்கா வெளிவிவகாரமைச்சு இவ்வறிக்கைக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இதே வகையில் நவாலிப் படுகொலைகளை வெளியுலகுக்கு கொண்டு வந்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசச் குழுவுடனும் சிறிலங்கா அரசு முரண்பட்டமை இங்கே குறிப்பிடத்தக்கது. உண்மையைச்சொன்னால் அரசுக்கு உடம்பெல்லாம் நோகிறது.

எது எவ்வாறெனினும் சிறிலங்கா அரசின் தமிழருக்கெதிரான அதர்ம யுத்தம் அரசால் வெல்லக்கூடிய தொன்றல்ல. இன ஒழிப்பைச் செய்வதற்குத்தான் அது உதவும். அதுவும் எத்தனை காலத்துக்கு செய்யலாம் என்பது தமிழ்மக்களின் கைகளில் தான் இருக்கிறது. விடுதலைப்புலிகளுக்குத் தேவையான ஆட்பலத்தையும் பணப்பலத்தையும் வழங்குவதன் மூலம் எமது மண்ணை மீட்டுவிடலாம்.

★ கோபாலசாமி, ராமதாஸ், வீரமணி ஆகியோரின்

# புலிகள் ஆதரவுப் பேச்சுக்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைக் கண்காணித்து அவர்களின் நடவடிக்கை பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய அரசு தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

தற்போது சென்னையில் தங்கியுள்ள தமிழக உள்துறை செயலாளர் திரு. பத்மநாபஜயர் மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சி தி மு.க, பாட்டாளி மக்கள் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றின் செயற்பாடுகளும் தீவிரமாக கண்காணிக்கபபடுகின்றன.

இக் கட்சிகளின் தலைவர்களான திரு வை.கோபாலசுவாமி டாக்டர் ராமதாஸ், திரு.தி.வீரமணி ஆகியோரின் பேச்சுக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உள்ளனவா என்பது பற்றியும் ஆராயுமாறு மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரை சந்திக்கச் செல்லும் தமிழக வாசிகளும் தீவிரமாக கண்காணிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தமிழகத்தில் புலிகள் ஊடுருவல் கண்காணிக்குமாறு அரசுக்கு பணிப்பு

(சென்னை)

இலங்கையிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவியுள்ளதாக இந்திய மத்திய அரசு தமிழகத்திற்கு அறிவித்துள்ளது.

20 சிரேஷ்ட உறுப்பினர்கள் அடங்கிய சுமார் 40 அல்லது 50 விடுதலைப் புலிகள் தமிழகக் கரையோரத்தில் இறங்கியுள்ளதாக உளவு அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று மத்திய உள்துறைச் செயலாளர் திரு. பத்மநாபஜயர் தெரிவித்துள்ளார்.

தமிழநாட்டினுள் பிரவேசித்துள்ள விடுதலைப் புலிகள் இயக்கக் கெரில்லாக்கள் அங்கு சிறைவைக்கப்பட்டுள்ள அவர்களது உறுப்பினர்களை விடுவிக்க அல்லது பொதுநிலைகள் மீது தாக்குதலை நடத்த முயற்சி செய்யக்கூடும் என்று திரு பத்மநாபஜயர் மேலும் கூறினார்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தமிழக அரசுக்கு வலியுறுத்தியுள்ளாராம்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைகளுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# 32 இராமேஸ்வரம் மீனவர்கள் பாக்குநீரிணையில் வைத்து கடத்தல்

[சென்னை]

கடலில் மீன் பிடிக்கச் சென்ற 32 இராமேஸ்வரம்மீனவர்கள், இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாக்குநீரிணைப் பகுதியில் கச்சதீவுக்கும், தனுஷ்கோடிக்கும் இடையில் மீன் பிடித்துக் கொண்டு கடந்த திங்கட் கிழமை இரவு கரை திரும்பத் தயாராகிக் கொண்டிருந்த போது, அதிவேகப் படகுகளில் அங்கு வந்த ஆயுதம் தாங்கிய நபர்கள் துப்பாக்கிமுனையில் விரட்டி இந்த 32 மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி படகுகளோடு கடத்திச் சென்று விட்டதாகத் தமிழகக் காவல் துறையினர் தெரிவித்தனர்.

மீனவர்கள் கடத்தப்பட்டது தொடர்பாக, தமிழகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராசி பலன்

**19-10-1995**
**வியாழக்கிழமை**
**[தமிழுக்கு ஐப்பசி 02]**

சமிநண்பகல் 12-06 வரைஆயிலியம் மு.ப. 9-04வரை சித்தாமிர்தயோகம், இராகுகாலம் பகல் 1 32 முதல் 3-02 வரை சுபவேளைகாலை 7-32 முதல் 9-02 வரை.

மேஷம்: பிடிவாத குணம், தொழில் போட்டி, அலைச்சல்.

இடபம்: மேலதிகாரிகள் பயம், வேலைப்பளு, பண வரவு.

மிதுனம்; குடும்ப விச்சல் அன்னியப்படல், மனக்கவலை.

கடகம்: எதிர்பாராத திருப்பம், குடும்பசுகம், பயணம்.

சிங்கம்: விதண்டாவாதம், பெரியோர் பகை, சகோதர துன்பம்.

கன்னி: தாய் வழி நினைவு, புத்திரர் உதவி, காரியசித்தி.

துலாம்: புதியமுதலீடு, கண்டிப்பு, அவசரமுடிவு

விருச்சிகம்: வீண்பகை, உள்ளக்குமுறல், வைத்திய செலவு.

தனுசு: தொழில் பேதம், குடும்பபிரிவு, எதிர்கால சிந்தனை.

மகரம்; முயற்சி வெற்றி, விருந்தினர் வருகை, கலகலப்பு.

கும்பம்: புதிய நட்பு, கல்வியினால் சிறப்பு, தர்மசிந்தனை.

மீனம்: அபிப்பிராயபேதம், அமைதிக்குறைவு, கெட்ட கருமம்.

— ஜோஸ்யர்.

# தமிழா! தமிழா

எத்தனையோ இலட்சம் வைத்து வீடுகட்டினாய்-அதை
இடிக்கிறான் பார்த்துப் பார்த்து எங்கு ஓடுறாய் - உன்னைப்
பெத்தவளை இழுத்துப் போறான் கண்ணை பொத்துறாய் -
உனக்குப்
பிறந்தபிள்ளை சுட்டுவிழப் பார்த்து ஏங்குகிறாய்-இன்னும்
எத்தனை நாள் பயந்து பயந்து ஓடப்போகிறாய் - உன்றன்
இருப்புக் கெங்கே இடம்பிடித்து வாழப் போகிறாய்
- தமிழா!
செத்தால் ஒரு முழுக்குத்தான் போ! திரும்பி அடியடா
- ஒன்று
சேர்ந்து எல்லாம் அடித்துக் கொல்வோம்
ஓடிவாங்கடா!

கட்டியபெண் டாங்கிடசேலை கழற்றி உரிகிறார் - அதை
கைகட்டி பார்த்து நிற்க நாங்கள் அடிமையா? இங்கவர்
எட்டுச்சூதில் எம்மை என்று வெற்றி கொண்டனர்? இலை
எந்தப் போரில் வென்று ஈழம் அவர்கள் ஆனது?
- நாங்கள்
நெற்றி வேர்வை சிந்தி உழைத்து வாழ்ந்த நாடடா
- வந்த
நீதியற்ற சண்டைக்கஞ்சி ஓடிப்போவதா - நாங்கள்
கற்றதெல்லாம் உற்ற போரில் மறந்து போகுமா
- உன்றன்
கடமை செய்யப் பயனைஎதிர் பார்ப்ப தேனடா!

ஒண்டி மண்டிச் செல்லடித்து உயிர் பறிக்கிறார் - இந்த
உலகை ஏய்த்துப்பணம் பறித்துப்படை குவிக்கிறார்-இங்கு
கண்ட பாட்டில் எம் பொருளைக் களவெடுக்கிறார்
- அவனை
கட்டிவைத்து அடித்துதைக்க கருத இல்லை ஏன்? - எங்கள்
பெண்டிர் மானம் அவலமாகச் சோரம் போகமுன்
- பணப்
பெட்டகத்தை சாவியை அரைக் கச்சில்நின்றெறிந்து - தமிழா
குண்டுபோட்டு உயிர்பறிஞ்சி போகமுன் எழு! கைக்
குண்டு வாங்கிக் கண்ட படையை முந்திக் கொன்றிடு

தில்லைச்சிவன்

பனை வளம்
தமிழீழ உயிர் வளம்

# பாணுக்காக தினமும் வீதிகளில் அலைந்து திரியும் மக்கள்

காலை முதல் மாலை வரை கையில் பையுடனும், போத்தல் கொள்கலனுடனும் மக்கள் வீதிக்கு வீதி கடைக்கு, கடை அலைந்து திரியும் காட்சி இப்போ யாழ் நகரில் சர்வ சாதாரணமாகி விட்டது.

மருந்துக்கு மண்ணெண்ணைக்கு, குடிநீருக்கு, அரிசிக்கு பருப்புக்கு இப்படி, அடுப்படித் தேவைக்குரிய அத்தனை பொருட்களுக்கும் தான் இத்தனை அலைச்சல்.

கடந்த ஒரு வாரமாக இப்போ புதிதாக மாவுக்கும் பாணுக்குமாக அலையத் தொடங்கியுள்ளார்கள்.

நகர மக்களை மட்டுமன்றி இடம்பெயர்ந்து வந்த நகரத்தில் குடியேறிய கிராம மக்களுக்கும் கூட இன்று பாண் ஒரு குடும்ப உணவாகி விட்டது.

காலை, மாலையென்ன நடுச்சாமம், நண்பகலில் கூடச் சாப்பிடலாம் எவ்வித கெடுதலையும் ஏற்படுத்தி விடாது. சுடுபாணாக இருந்தால் சும்மாவே சாப்பிடலாம். அதில் ஒரு தனிச் சுவை இருக்கும். சிறுவர்கள் என்றால் சீனியோடு சாப்பிடலாம். வயோதிபர்கள் வாழைப்பழத்துடன் சாப்பிடலாம். வருத்தக்காரர்கள் கூட அதனை தணலில் வாட்டி வதக்கிவிட்டு சாப்பிடலாம். இப்படியாக எதற்கும் வளைந்துகொடுக்கும் பாணுடன் மக்கள் நீண்ட நெடுநாளாக பழக்கப்பட்டு விட்டார்கள். குடும்ப உணவாகி விட்டது. பாணைப் போலத்தான் மாவும் மக்களுக்கு பழக்கப்பட்டு விட்டது. ஆனால் வீட்டில் நடக்கும் விருந்துபசாரம் வைபவங்களில் பாண் இடம் பெறுவதில்லை.

மலிவானது மா, இடித்து அரைத்து வறுத்து ஒத்தத் தேவையில்லை. அவசர தேவைக்கு அரைமணி நேரத்தில் உணவாக்கி விடலாம்.

இந்தமாவந்துசேர்ந்ததெல்லாம் 50 வருடத்திற்கு முன்னர்தான். இரண்டாம் உலக யுத்தத்துடன் அறிமுகமானது.

ஆரம்பத்தில் அறிமுகமான போது, அதனைச் சாப்பிடவே முகம் சுளித்தார்கள். பசைக்கும், பாடை ஒட்டுவதற்கும் தான் பயன்படுத்தினார்கள். கிராமரீதியாக இந்த மாவினால் பலகாரம், பண்டங்கள் செய்து காட்டப்பட்டு படிப்படியாக அடுப்படிக்கு குடி வந்துவிட்டது இந்த மா. ஆனால் இன்றும் கிராமப் பகுதி மக்களில் பலர் இந்த மாவைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. உள்ளூர் உற்பத்திகளைத்தான் உணவாக்குகிறார்கள்.

தமிழர்களின் இல்லங்களில் தினமும் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் இன்று மறக்கப்பட்டு விட்டன. அரிசி, உழுந்து, கடலை, பயறு மாக்களில் எத்தனையோ உணவுகள் பரம்பரையாக தயாரிக்கப்பட்டது. இன்று அவற்றின் பெயரைக் கூடசனர் மறந்து விட்டனர்.

காலை உணவாக புக்கை, இடியப்பம், பால் அப்பம், தோசை, இட்லி, பிட்டு, கூழ், சோளம், கஞ்சி, உப்புமா, அரிசி ரொட்டி, கடலை, பொரித்த அரிசிமா, மரவள்ளி கிழங்கு, பனங்கிழங்கு பனாட்டு, பழஞ்சோறு இப்படி பல்வேறு வகையான உணவுகளுண்டு. புளுக்கொடியல்மா தினைமா, எள்ளுப்பாகு இப்படிப் பல பிட்டு வகையில், குரக்கன் பிட்டு, ஒடியல்பிட்டு அரிசிப் பிட்டு, மரவள்ளி மா பிட்டு இப்படி பல வற்றாளைக் கிழங்கு, ராசவள்ளி, மரவள்ளி இப்படி கிழங்கு வகைகள் காலை உணவாக மட்டுமன்றி மாலை உணவாகவும் மத்தியான உணவாகவும் சாப்பிடலாம்.

இன்று வீடுகளில் இதில் எந்த உணவைத்தான் நினைத்துப் பார்க்கிறார்கள். பாணையும், மாவையும் தான் எதிர்பார்க்கிறார்கள்.

இங்கு இராணுவ நடவடிக்கையினால் பயிர் நிலமெல்லாம் பாழாகி விட்டது; விளை நிலமெல்லாம் வீணாகி விட்டது. விவசாயிகள் எல்லாம் தோட்டம், துரவுகளை கைவிட்டு இடம்பெயர்ந்து விட்டார்கள். உரத்தடையால் உணவு உற்பத்தியில் பாதிப்பு.

அகதிகளாக தஞ்சமடைந்து கோயில்கள், வீடுகள், பாடசாலைகள், கொட்டில்கள், குடிசைகளில் வாழும் அவர்கள் விரும்பிய உணவை சமைத்து சாப்பிட வசதியில்லை. விறகு தட்டுப்பாடு ஒரு பக்கம், விலைவாசியேற்றம் மறுபக்கம்.

இந்த நிலையில் தான் பரம்பரையாக பாணையும், மாவையும் ஏறிட்டுப் பார்க்காத கிராம விவசாயிகள் கூட வேறுவழியின்றி இன்றுபாணுக்காக தவம் கிடக்கிறார்கள்.

இரண்டு மூன்று நாட்களாக பாணுக்காக மக்கள் வீதி, வீதியாக அலைந்து திரிகிறார்கள். பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் நள்ளிரவு, நடுச்சாமம் முதல் பாண் கடை வாசலில் படுத்துறங்கும் காட்சி. வெறும் வயிற்றுடன் ஐந்தாறு மணி நேரம் கால் கடுக்க இரவில் தவிக்கும் கோலம், நெஞ்சை உருக்குவதாக உள்ளது.

யாழ் நகரில் ஒரு பாண் விற்பனை நிலையம். அதிகாலை 3 மணிக்கே கியூ ஆரம்பித்து விட்டது. வீதி ஓரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சைக்கிள்கள். ஒரு புறம் ஆண்களுக்கான கியூ, மறுபுறம் பெண்களுக்கான கியூ, நீண்ட நேரம் நின்று களைப்புற்ற சிலர் இருந்துவிட்டனர்.

**யோகி**

பள்ளிச் சீருடையுடனும் சில மாணவர்கள். தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், அகதிகள் இப்படி பல்வேறுபட்டவர்கள் அந்தக் கியூவில் இடம் பெயர்ந்து வந்தவர்கள் தான் அதிகம். நகரில் நிரந்தரமாக வாழ்பவர்களும் பலர். அவர்களுக்குப் பாண் பழக்கப்பட்டு விட்டது இனி கைவிடுவதென்றால் கஷ்டம் தான்.

எனக்கு தெரிந்தவர் ஒருவரைச் சந்தித்தேன். அவருக்குப் பின்னால் நான்கு சிறுவர்கள். எல்லோரும் அவர் பிள்ளைகள் தான். எதிர்க் கியூவில் அவரது தாயாரும், கைக்குழந்தையுடன் அவரது மனைவியும் நின்றனர்.

''ஒருவருக்கு ஒரு றாத்தல் மட்டும் தான், அதனால் தான் முழுக் குடும்பமும் வந்து நிற்கிறோம்'' என்றார் அவர், பரிதாபமாக இருந்தது. அவரின் பிள்ளைகள் எல்லோரும்கையில் சிலவறைக் காசு வைத்திருந்தனர். எதிர்க் கியூவில் நின்ற அவரின் மனைவி தூக்கி வைத்திருந்த குழந்தையின் கையில் கூட ஒரு பத்து ரூபா நோட்டு. அதுவும் பாணுக்காகத்தான் இருக்கவேண்டும்.

'நேற்று வந்தீர்களா? என்றேன்'

'முந்தநாளும் வந்தோம். பிந்திவிட்டோம். பாண் கிடைக்கவில்லை'. என்றார்.

உடுத்த உடையுடன் இடம் பெயர்ந்து வந்தவர் அவர். நகரில் தெரிந்த ஒருவரின் வீட்டில் இருக்கிறார்.

''காலையும் மாலையும் பாண் தான்" என்றார் அவர். பிள்ளைகள் சோர்ந்து போயிருந்தார்கள் காலையில் தேநீர் கூட அருந்தியிருக்க மாட்டார்கள்.

நேரம் செல்லச் செல்லக் கியூவும் நீண்டுகொண்டு போனது.

பாண் வாங்கிய சிறுவன் ஒருவன் சனங்களை ஊடுருவிக் கொண்டு வேகமாகப் பின்பக்கம் ஓடினான். அவனை நோக்கினேன். அந்த சிறுவன் திரும்பவும் கியூவுக்கு போய் கடைசியாக நின்றான். வீட்டில் உள்ளவர்களுக்கு ஒரு றாத்தல் போதாது ஆதலால் மீண்டும் வாங்குவதற்கு நிற்கிறான். அதிகாலை வந்திருக்கவேண்டும் அந்தச் சிறுவன். பசிக்களை முகம் வாடியிருந்தது. மெதுவாக அங்குமிங்கும் பார்த்துவிட்டு கையிலிருந்த பாணை ஒரு பக்கத்தால் பிய்த்துப் பிடுங்கிக் கியூவில் நின்றபடியே தின்று கொண்டிருந்தான். அதனைப் பார்க்கக் கவலையாக இருந்தது.

என்னைக் கடந்து ஒருவர் வேகமாக சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். தெரிந்த முகம்.

''ஒரு றாத்தல் காணுமா'' என்றேன்

பள்ளிக்குப் போற பிள்ளைகளுக்கு கொடுத்தனுப்பிவிட்டு பின்னர் எங்கள் வயிற்றுப் பாட்டைப் பார்ப்போம்'' என்று கூறியபடி சென்று கொண்டிருந்தார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரம், எல்லோருக்கும் அவசரம். கந்தோருக்குச் செல்லும் நேரம் கடந்துவிட்டது அடிக்கடி கைக்கடிகாரத்தை பார்த்தபடி நின்றவர் சிலர். இப்படியாக மக்கள் பாணுக்காக தினமும் தவிக்கின்றனர்.

மனுக்கள் செய்துமகஜர் அனுப்பிமாதக்கணக்கில்பதில் வராமல் உரக்கக் குரல் எழுப்பி ஊர்வலம் நடத்தி உலகம் அறிந்து எட்டுப் பத்து வாரங்களுக்குப் பின் தான் மாக்கப்பல் வருகிறது. தென்மராட்சிக்குப் புதிதாக சென்றுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் பசி தீர்ப்பதெப்படி? அடுத்த மாக்கப்பல் வரும்திகதியாருக்குமே தெரியாது.

இந்த நிலையில் உயர் அதிகாரிகள் உடனடியாக செயல்பட்டு தேவையான உணவுப் பொருட்களைத் தருவிக்க முயற்சிப்பது அவசியமாகும். அத்துடன் தொண்டர் நிறுவனங்கள் திக்கற்ற மக்களின் குறைகளை தீர்ப்பதில் மேலும் அதிக அக்கறை எடுப்பது அவசியமாகும்.

# ஆரம்ப ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

(திருநெல்வேலி)

ஆரம்ப ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த ஒரு தொகுதியினருக்கு விரைவில் நியமனம் வழங்கப்பட உள்ளது.

உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு ஐந்து பேர் வீதம் இந்நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. -157.வி

# மரக்கறிகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மரக்கறி வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

சந்தைகளில் ஒரு கிலோ பயிற்றங்காய் எழுபது ரூபா தொடக்கம் எண்பது ரூபா வரையும், கத்தரிக்காய் ஒரு கிலோ அறுபது ரூபாவாகவும், முருங்கைக்காய் ஒரு கிலோ நூற்றி இருபது ரூபா ரூபாவாகவும், தேசிக்காய் ஒன்று பத்து ரூபாவாகவும் விற்பனையாகி வருகிறது. -162

# பாடசாலைக் காணிகள் விபரம் சேகரிப்பு

(திருநெல்வேலி)

வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலைகளின் காணிகளின் விபரங்கள் கோரப்பட்டுள்ளது.

பாடசாலைகள் அமைந்துள்ள காணியின் அளவு பாடசாலைக்கு சொந்தமான விவசாய விளையாட்டு இடங்களின் அளவுகள் அவை நன்கொடையாகவா குத்தகை மூலமா அல்லது வாடகைக்கு உரியனவா என்ற விபரங்களையும் உடன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

இதற்கான மாதிரிப்படிவமும் கல்வித்திணைக்களம் ஊடாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் உடனடியாக அவற்றை பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். 157

## ஒய்வூதியம் பணமாக வழங்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மானிப்பாயிலுள்ள கிராமிய வங்கியில் ஒய்வூதியப் பெறுபவர்களுக்கான அக்டோபர் மாதத்திற்கான ஒய்வூதியப் பணம் கடந்த வாரம் வழங்கப்பட்டது. 400க்கு மேற்பட்ட ஒய்வூதியர்கள் இந்த கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. 72

## தேசிய பாதுகாப்பு நிதி சேகரிக்கும் இடவிபரம்

### சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

| திகதி | காலம் | கிராமசேவையாளர் அலுவலர் பிரிவு | | நிதிபெறப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 20-10-1995 | காலை 9 மணி | சாவகச்சேரி நகர் | யா/300 | மட்டுவில்மகாவித்தியாலய |
| 21-10-1995 | தொடக்கம் பி.ப. | கோவில் குடியிருப்பு | யா/301 | அருகாமை-மட்டுவில் |
| 22-10-1995 | 2 மணி வரை | சங்கத்தானை | யா/302 | |
| | | சாவகச்சேரி வடக்கு | யா/303 | |
| | | மண்டுவில் | யா/304 | வருவாய்ப்பகுதிச் |
| | | கல்வயல் | யா/305 | செயலகம் கச்சாய் வீதி |
| | | நுணாவில் கிழக்கு | யா/306 | சாவகச்சேரி |
| | | நுணாவில் மத்தி | யா/307 | |
| | | நுணாவில் மேற்கு | யா/308 | |
| | | கைதடி நுணாவில் | யா/309 | |
| | | மட்டுவில் தெற்கு | யா/310 | |
| | | மட்டுவில் நுணாவில் | யா/311 | |
| | | மட்டுவில் மத்தி | யா/312 | |
| | | மட்டுவில் வடக்கு | யா/313 | |
| | | மட்டுவில் கிழக்கு | யா/314 | |
| | | சந்திரபுரம் | யா/315 | |
| | | சரசாலை தெற்கு | யா/316 | |
| | | சரசாலை வடக்கு | யா/317 | |
| | | மீசாலை கிழக்கு | யா/318 | |
| | | மீசாலை மேற்கு | யா/319 | |

குறிப்பு: தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதியினை செலுத்துவதற்கு ஒப்புதலளித்து இதுவரையும் பணம் செலுத்தாதவர்கள் மேற்குறிப்பிட்ட இரு இடங்களிலும் செலுத்தவும்.

# ‘சண்ஷைன்’ தாக்குதலில் முப்படையும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்-கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட ‘சண்ஷைன்’ தாக்குதல் நடவடிக்கையில் கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய முப்படைகளும் பங்கேற்றதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் படையினர் எதிர்பாராத பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தில் காயமடைந்த படையினரும், இறந்த படையினரின் சடலங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

காயம் அடைந்தவர்களில் பலர் மீண்டும் போர்முனைக்குச் செல்லமுடியாத நிலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

காயமடைந்த படையினரால் கொழும்பு ஆஸ்பத்திரி நிரம்பி வழிவதாகத் தெரிவிக்கப்பட்டது. -ரி

# “போராட்ட சூழலில் உயர்ந்த இலக்கியங்கள் படைக்க வேண்டும்”

## — கவிஞர் புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

இன்றைய அரசு எம்மீது ஒரு பெரும் போரை நடத்தி வருகிறது. இப்போருக்கு நாம் முகம் கொடுக்கும் வகையில் துறைசார்ந்த ஒவ்வொருவரும் தமது துறைசார்ந்த பணிகளை இப்போராட்டத்துடன் இணைந்து செயல்பட வேண்டியது அவசியமானது தோன்றுகிறது.

யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் ‘‘என்னுடையதும் அம்மாவினுடையதும்’’ நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்; எமது போராட்டத்துக்கு பலம் சேர்ப்பவர்கள் இரண்டு வகையினராவர்; எழுத்துப் படைப்புக்கள் மூலம் செயற்படுவது மற்றும் எழுத்துப் படைப்புக்களுடன் போராட்டத்துடன் இணைந்து செயற்படுவதாகும். திரு சிதம்பர திருச்செந்திநாதன் தனது சிறந்த எழுத்துப்படைப்புடன் இணைந்து தன்னை முழுமையாகப் போராட்டத்துடன் அர்ப்பணித்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

இன்று எம்மத்தியில் ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த வேளையில் எழுத்தாளர்கள், கலைஞர்கள் தமது பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டியது கடமையாகிறது. ஆறியமர்ந்து படைக்கப்படும் படைப்புக்கள் உயர்வாக இருந்த போதிலும் போராட்ட நேரங்களில் ஆறியமர்ந்து படைப்புக்களை மேற்கொள்ளப்படலாம் என எண்ணாது அந்த நேரங்களில் அந்தந்தத் தேவைகளுக்கு அமைவாக உயர்ந்த இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டியது ஒரு கட்டாயத்தேவையாகிறது என்றார்.

இந் நூலின் வெளியீட்டுரையை கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த திரு.சோ தேவராஜா நிகழ்த்தினர்.

நூலின் முதற் பிரதியை உடுவில் பிரதேச செயலர் திரு மகாலிங்கம் வழங்க பூபாலசிங்கம் பொத்தகசாலை உரிமையாளர் திரு.இராசன் பூபாலசிங்கம் பெற்றுக் கொண்டார். 162-ரி

யாழ். ஆஸ்பத்திரியில் 9 மாதத்தில்

# இரண்டரை லட்சம் பேர் சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர்கள் பிரிவில் கடந்த 9 மாத காலத்தில் சுமார் 2,42 036 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதனைவிட வார்ட்டுகளில் தங்கியிருந்து சுமார் 48,781 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

கடந்த 9 மாதகாலப் பகுதியில் மட்டும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றிருப்பதாக வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

காய்ச்சல், தடிமன், மலேரியா, சளிச்சுரம், அம்மை நோய் மற்றும் பல நோய்களினால் பீடிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றோரே அதிகம்.

குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல் போன்றவற்றிற்கு இலக்காகி அதிகமானோர் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெற்றிருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும்தெரிவித்தன. (170-சி)

# வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு இதுவரை 27,000 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

பிரிந்த நாட்டை ஒன்றுபடுத்துவதற்கே அரசியல் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் இந்திக குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பதினொரு லட்சம் பேர் அகதிகளாக உள்ளனர்.

பல வருடமாக தொடரும் இந்த யுத்தத்திற்கு இதுவரை 27,000 கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பல ஆயிரம் கோடி ரூபா செலவு செய்யப்படவுள்ளது.

யுத்தம் நிறுத்தப்பட்டால் இவ்வாறான செலவுகளை அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும்.

1981-ம் ஆண்டு யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட போது அங்கிருந்த பெறுமதிமிக்க 94,000 புத்தகங்களும் எரிக்கப்பட்டன.

1983-ல் நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். எண்ணிறந்த மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டன. மூவாயிரத்திற்கும் அதிகமான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இவையெல்லாம் யுத்தத்தினாலே ஏற்பட்ட வடுக்களே என்றும் அவர் மேலும் தெரிவித்தார். -ரி

## அலுவலக இடமாற்றம்

இதுவரை 499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த வடமாகாண தெ. ப. பொ. கூ. ச சமாச தலைமை அலுவலகம் நாளை 19-10-95 வியாழன் தொடக்கம் சுண்டுக்குழி, சோமசுந்தரம் லேனில் உள்ள இலக்கம் 52 கட்டிடத்தில் இயங்கவுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

எனினும் சமாசத்தின் காதிநாதி விநியோகப்பகுதி, சந்தைப்படுத்தல் பகுதி, அச்சகப் பகுதி என்பன தொடர்ந்தும் பழைய மேற்படி முகவரியில் இயங்கும் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.

பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்

(எ 5405)

## பால் கொள்வனவு

### யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்

தற்கால அனர்த்த சூழ்நிலையில் எமது சங்கத்திற்கு பால் வழங்கும் வாடிக்கையாளர்கள் தற்போது தாங்கள் பால் வழங்கும் கிளையில் பால் வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் பின்வரும் ஏதாவது ஒரு கிளையில் பாலை வழங்கி தங்களது பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்;

1. மத்திய பால்சாலை - திருநெல்வேலி
2. உரும்பிராய் பால்சாலை - பலாலி வீதி உரும்பிராய் சந்தி
3. இணுவில் பால்சாலை - காங்கேசன்துறை வீதி இணுவில்
4. பெருமாள் கிளை - 90 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்
5. ஆரியகுளம் கிளை - பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
6. மாக்கெட் கிளை - கண்டிவீதி [மடத்தடி] யாழ்ப்பாணம்
7. நல்லூர் கிளை - கோவில் வீதி நல்லூர்
8. கல்வியங்காட்டு கிளை - ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு
9. அரியாலை கிளை - கனகரத்தினம் வீதி அரியாலை

கூடியளவு காலை 7 மணிக்கு பிந்தாமலும் மாலை 2 மணிக்கு பிந்தாமலும் பாலை வழங்கி உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொது முகாமையாளர்
திருநெல்வேலி கிழக்கு
கோப்பாய்

(எ 5406)

## இணுவிலில்

(1ம் பக்க தொடர்ச்சி)

படுகாயமடைந்த அனைவரும் புக்காராவின் குண்டு வீச்சு தாக்குதலுக்கு அஞ்சி பாதுகாப்பு தேடி பதுங்கு குழிக்குள் விரைந்து ஓடிய போதும் பதுங்கு குழிகளினுள் ஒளிந்து கொண்ட போதும் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

சிலர் பதுங்கு குழிக்குள் பதுங்கு குழி மண்ணால் மூடப்பட்டு அதற்குள்ளேயே இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டனர்.

இறந்தவர்கள் அனைவரும் கடந்த திங்கட்கிழமை ஊரெழுவில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இப்பகுதியில் தஞ்சமடைந்தவர்களாவர்.

இக்கொடூர தாக்குதலில் உயிரிழந்தோர் விபரம் வருமாறு:-

கணபதி கிருஷ்ணமூர்த்தி (வயது-39), கிருஷ்ணமூர்த்தி பரமேஸ்வரி (வயது-34), கிருஷ்ணமூர்த்தி யனித்தா (வயது-16), கிருஷ்ணமூர்த்தி வனித்தா (வயது-14), கிருஷ்ணமூர்த்தி தயாபரன் (வயது-13), கிருஷ்ணமூர்த்தி நவநீதன் (வயது-11),

மேற்படி ஆறு பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இக்குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் காயத்துடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினான்.

நல்லதம்பி சின்னத்தம்பி (வயது-48), சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை (வயது 43), சின்னத்தம்பி செல்வரஞ்சித மலர் (வயது-23), சின்னத்தம்பி சசிகுமார் (வயது 21), சின்னத்தம்பி ரமேஸ்குமார் [வயது-12], இவர்கள் ஐவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இக்குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிர் தப்பினர்.

படுகாயமடைந்தோர் விபரம் வருமாறு: கிருஷ்ணமூர்த்தி மயூரன் [வயது-9], சின்னத்தம்பி சுகிர்தா [வயது-15]. சின்னத்தம்பி சுகந்தினி [வயது-18], இவர்கள் இருவரும் வீட்டிற்குள் நின்றதால் காயத்துடன் தப்பினர்.

மற்றும் ஆர். ரஜனி [வயது-22], ரி. இலட்சுமி [வயது-40], ஆர். சந்திரபவான் எ. முத்துவேலு [வயது-65] எ. விஜயபாஸ்கரன் [வயது-26], எஸ். இராசமலர் [வயது-40], எம். கார்த்திகேசு [வயது-70] ஆகியோர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொடூர தாக்குதலினால் இவர்களின் இரண்டு குடிசைகளும் சேதமடைந்தன. இதனைவிட அருகில் உள்ள வீடுகள் சிலவும் சேதத்திற்கு உள்ளானதுடன் கோழிகளும் இறந்த நிலையில் அங்கும் இங்குமாக சிதறி கிடந்தன. முருங்கை மரம் ஒன்று எரிந்த நிலையில் கருகி இருந்தது.

துவிச்சக்கரவண்டிகள், வீட்டுப் பொருட்கள் தூக்கி எறியப்பட்ட நிலையில் சிதறிக்கிடந்தன. இந்த பயங்கர குண்டுத் தாக்குதலினால் இப்பகுதி மயானம் போன்று காட்சியளிக்கின்றது. 170-சி

## தணிக்கைக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

பத்திரிகைத் தணிக்கைக்கு எதிராக நேற்று ஐக்கிய தேசியக்கட்சி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் கூடிய கூட்டத்தின் போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டு நேற்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதென்று தெரிவிக்கப்படுகிறது. ம-கி

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அதி வணக்கத்திற்குரிய ஏ.ஜே பேனாட் அடிகளார் குருத்துவப்பட்டம் பெற்ற 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா நிகழ்வு இன்று 19 ஆம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. 154

## ஆயிரக்கணக்கில்

(1ம் பக்க தொடர்ச்சி)

என்றரீதியில் பெருமளவு ஷெல்கள் ஏவப்பட்டன. இதனால் பொதுமக்களின் குடியிருப்புகள் பல சேதமடைந்ததுடன் கட்டிடங்கள் பலவும் சேதமுற்றன.

ஷெல் வீச்சால் குடாநாடே அதிர்ந்தவண்ணமிருந்தது. சி

## யாழ். இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக கொழும்பு சென்ற இலங்கை வங்கி பிரதிநிதி ஒருவர் அநுராதபுரத்திலிருந்து 3 கோடி ரூபாவை திருமலைக்கு எடுத்து வந்து அங்கிருந்து ஹறணக்கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவர இருந்தார்.

பணத்துடன் இவர் ஹறணக்கப்பலில் இருந்த போது அங்கு வந்த படையினர் யாழ்ப்பாணத்திற்கு இந்தப் பணத்தை கொண்டு செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதிக்கவில்லை எனக்கூறி பணத்தை எடுத்துவர அனுமதிக்கவில்லை.

இதனால் மேற்படி மூன்று கோடி ரூபாவும் உடனடியாக மீண்டும் அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 170-இ

# வல்வை ஆஸ்பத்திரி சுற்றுடலை பாதுகாப்பு வலயமாக்க கோரிக்கை

[வடமராட்சி]

வல்வெட்டித்துறை அரசினர் மாவட்ட வைத்தியசாலை அமைந்துள்ள பகுதியை பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்துமாறு மாவட்ட வைத்திய அதிகாரி அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ் வைத்தியசாலைச் சூழலில் பலாலி இராணுவமுகாமிலிருந்து தினமும் மேற்கொள்ளப்படும் அகோர ஷெல் தாக்குதலினால் வைத்தியசாலை ஊழியர்கள், டாக்டர்கள் மற்றும் நோயாளிகளின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து இங்கு கடமையாற்றும் பெருமளவு ஊழியர்கள் வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து வெளியேறி வருகின்றனர். இதனால் நாளுக்கு நாள் ஆஸ்பத்திரியின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றது. எனவே ஆஸ்பத்திரி சுற்றுடலை உடனடியாக பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்துமாறு யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரை வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

இது குறித்த மகஜர் ஒன்றை பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ளதுடன் பிரதிகளை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் யாழ் பிரதிநிதி, யாழ் அரச அதிபருக்கும் அனுப்பியுள்ளனர். 51 சி

# இராணுவ தாக்குதலை நிறுத்தி பிரச்னைக்கு உடன் தீர்வு காணவும்

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவப் பலத்தைக் கொண்டு பெரும் போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. இவ் இராணுவ நடவடிக்கைகளால் யாழ் குடா மக்கள் அனைவரும் பாதிக்கப் படுகின்றனர். இராணுவ தாக்குதல்களை நிறுத்தி நியாய பூர்வமாக இனப்பிரச்னைக்கு தீர்வுகாணுமாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆயினும் அவர் கவனத்தில் எடுக்காததையிட்டு எமது மக்கள் பெரும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றார்கள் என யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது யாழ் குடாநாட்டில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர். கடந்த இரு நாட்களாக சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின் போது பாரிய எறிகணை வீச்சுக்கள், விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் அப்பாவிப் பொது மக்கள் 25 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். ஏராளமானோர் இடம் பெயர்ந்து இருக்க இடமின்றி தெருக்களில் அலைகின்றனர்.

இவ்வாறு வாழ்வதற்கான உரிமைகளை மீறும் ஸ்ரீலங்கா இராணுவத்தினது மனிதநேய மற்ற கொடூரமான செயல்களை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் அத்துடன் மனிதநேயமற்ற இவ்வாறான இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றோம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சி

# இரு ஐ. நா. அதிகாரிகள் யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகளான திரு. ஜோக் பேக்கர், திரு. பப்பியோ வராலியோ ஆகியோர் நேற்று ஹபறணை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

யாழ் நகரில் தங்கி நிற்கும் இவர்கள் இராணுவநடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்கள் பற்றிய விபரங்கள் மற்றும் இங்குள்ள உணவுநிலை பற்றியும் ஆராயவுள்ளனர் அத்துடன் யாழ் அரசாங்க அதிபர் மாநகராட்சி ஆணையாளர், திட்டப்பணிப்பாளர், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் பற்றி ஆராயவுள்ளனர்.

அகதிமுகாம்களுக்கும் இவர்கள் நேரில் சென்று அங்குள்ள நிலைமைகள் பற்றி ஆராயப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. 162-சி

## சத்திரசிகிச்சை நிபுணர் கணேசரட்ணத்தின் இடமாற்றம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கணேசரத்தினத்தின் இடமாற்றம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் நவமலர் கனகரட்ணம் கொழும்பில் சுகாதார அமைச்சின் செயலாளருடன் நடாத்திய பேச்சுக்களையடுத்து புதிதாக சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரை இங்கு நியமிக்கும்வரை இவரது இடமாற்றத்தை நிறுத்தி வைக்க இணக்கம் காணப்பட்டது.

எனினும் புதிதாக இங்கு சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிப்பது குறித்து எதுவித தகவலும் தெரிவிக்கப் படவில்லையாம். 170-சி

# கிராம அலுவலர்க்கான பதவி உயர்வுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலர் சேவையின் அதிசிறப்புத் தரத்துக்குப் பதவி உயர்வு பெறுவதற்கான விண்ணப்பங்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கோரப்பட்டுள்ளது

இப்பதவி உயர்வுப் பரீட்சை மூப்பு அடிப்படையிலும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அடிப்படையிலும் நடைபெறும்.

இதற்கான சுற்றுநிருபம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து யாழ். மாவட்டச் செயலகத்திற்கு தாமதமாகக் கிடைத்துள்ளது. இதன் விண்ணப்ப முடிவுத் திகதியான சென்ற மாதம் 30ம் திகதியாக இருந்த போதிலும் இம் மாதம் 25ம் திகதிக்கு முன்னதாக யாழ். மாவட்டச் செயலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். 162-சி

# 15 படையினரின் சடலங்களை புலிகள் கையளித்தனர்

(கொழும்பு)

மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரில் 15 பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்துள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கை செயலகம் நேற்று தெரிவித்தது

இத் தாக்குதலின் போது 32 இற்கும் மேற்பட்ட படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டதும் இதில் 15 பேரின் சடலங்களை புலிகள் கைப்பற்றியதும் தெரிந்ததே. க-சி

# 1000 மெ. தொன் மா ஹபரணவில் வந்தது

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை துறைமுகத்திலிருந்து ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமைமாவை ஏற்றிக் கொண்டு ஹபறணைக்கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலிலிருந்து மா இறக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம் மா பாண் உற்பத்தி செய்வதற்காக பேக்கரிகளுக்கு மட்டும் வழங்கப்படவுள்ளதாக செயலகவட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சென்ற மாத கோட்டா எரிபொருளும் வந்து சேர்ந்தது

162-170-சி

# பெருமளவு மக்கள் நேற்றும் இடம்பெயர்வு

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவத்தினர் நேற்று மூன்றாவது நாளாக வலிகாமம் வடக்கு, கிழக்குப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஷெல் தாக்குதலினால் மக்கள் இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

இராணுவத்தினர் மேற்கொள்ளும் ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகளில் வீழ்ந்து சேதத்தை உண்டுபண்ணுவதால் மக்கள் பீதியுற்று இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்கின்றனர்.

கொக்குவில், கோண்டாவில் தாவடி, இணுவில், மருதனார் மடம் கோப்பாய், இருபாலை, உரும்பிராய், ஊரெழு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களே இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர். 170-162-சி

# காசுக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கான ஒரு தொகை காசு நிதித்துறையிடம் உள்ளது. அனைவரையும் நாளை 20ம் திகதி காலை 11-00 மணிக்கு கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தந்து காசைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

சபாநாதன் சு. கா. பாலகிஷ்ணன். தேவாலய வீதி, சங்கானை. வேலுப்பிள்ளை கந்தவனம் நீர்வேலி தெற்கு, நீர்வேலி சபாரட்ணம் நாகேஸ்வரி, அராலி தெற்கு, சிவசிதம்பரம் புவனேஸ்வரி, சிவகுமார் வீதி, சுன்னாகம் மேற்கு. சத்தியமூர்த்தி சுலாதேவி, சிவகுமார் வீதி, சுன்னாகம் மேற்கு. ந. குருபரன், வள்ளியம்மன் கோவில், சுழிபுரம் கிழக்கு. செ. செல்வரட்ணம், காளி கோவில் வீதி. ஏழாலை மத்தி. சிவகுரு விஜயராசா, 3ம் சந்தி, கெருடாவில் தொண்டமானாறு. பொ. கணேசலிங்கம், சுகிதா நகைமாடம் சுன்னாகம். தம்பையா இராசரத்தினம், ஆச்சிரமத்தடி. சரந்தன், நீர்வேலி மேற்கு. கே. யோதிலிங்கம், ஐயனார் வீதி, சண்டிலிப்பாய். பாலசிங்கம் நாகேஸ்வரி, நீர்வேலி தெற்கு. திரு கந்தப்பு சண்முகம். நளின் வீதி, வட்டு கிழக்கு. ந சரஸ்வதி, கரப்பிட்டி பிள்ளையார் கோவிலடி அராலி தெற்கு. திருமதி கே. கண்ணுதேவி, சிறுப்பிட்டி ஏழாலை மேற்கு. சி

## காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் ஒருவர் நேற்று மரணமானார்.

ஊரெழுவைச் சேர்ந்த குண்டுமணி குமுதன் (வயது 14) என்பவரே இறந்தவராவார். 170-சி

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

20ம், 21ம் நாள்களில் கிளிநொச்சியில் நடைபெற இருந்த வட தமிழீழப் பள்ளிகளுக்கிடையேயான தமிழ்மொழித்திறன் போட்டிகள் தற்போதைய சூழ்நிலையினால் ஒத்திவைக்கப்படுகின்றன. போட்டிகள் நடைபெறும் நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும் என தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சுப்பசொனிக்

(1ம் பக்க தொடர்ச்சி)

வைத்துக் கொண்டிருந்த அச்செழுவில் இருந்து இடம் பெயர்ந்து உரும்பிராய் கிழக்கில் வசித்து வந்த கஸ்பர் இருதயராசா (வயது 22) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இந்த குண்டு வீச்சு தாக்குதலினால் வீடுகள் மற்றும் வாழைத்தோட்டங்களும் சேதத்துக்குள்ளாயின.

இதேவேளை நேற்று மாலை 4 மணியளவில் நீர்வேலிப் பகுதியில் சுப்பசொனிக் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. 170-சி

## புன்னாலைக்கட்டுவன

(1ம் பக்க தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல்களை நடாத்தி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புலிகளின் மிகக் கடும் எதிர்த் தாக்குதலால் படையினரின் முன்னேற்ற முயற்சி தடைப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வி-சி

## சேதம்

(1ம் பக்க தொடர்ச்சி)

பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த தாக்குதலில் இராணுவத்தினர் வெற்றி தோல்வியைகலந்து சந்தித்துள்ளனர்.

இதுவரை இந்த நடவடிக்கை குறித்து இராணுவம் குறைவாகவே தகவல்களை வெளியிட்டுள்ளது. தமக்கு ஏற்பட்ட இழப்புகளால் இராணுவ அதிகாரிகள் கலக்கமடைந்துள்ளனர்.

இந்நிலையில் சில வேளை படையினர் இத்தாக்குதலை நிறுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டது. சி

## அகோர

[1ம் பக்க தொடர்ச்சி]

இணுவில், மருதனார்மடம், கோண்டாவில், உரும்பிராய், சுன்னாகம், ஊரெழு, அச்செழு, மயிலணி, நீர்வேலி, கோப்பாய், இருபாலை. கொக்குவில் போன்ற பகுதிகளில் நேற்றும் பரவலாக வீழ்ந்துவெடித்துள்ளன.

ஊரெழு அம்மன் கோவிலடியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கிலக்காகி சோமசுந்தரம் பாலசுப்பிரமணியம் (வயது 50) என்பவர் கொல்லப்பட்டார்.

கோண்டாவிலில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் சசிகுமார் (வயது 17), கே அருளானந்தம் (வயது 34), பி மிதுளா (வயது 18) ரி துரைமணி (வயது 50) ஆர் பிரமிலா (வயது 11), எஸ் தவராஜா (வயது 35), பி சஜீதரன் (வயது 12), புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த ஏ கனகநாயகி [வயது 65] ஆகியோர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 170-சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.